DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 4 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW- 1** |
| **Name** | **:** | முருகன் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**<u>8.10.2025</u>**

**முதல் விசாரணை :**

நான் கப்பத்துரை கக்கன்ஜி காலனியில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எனக்கு செல்வி என்ற மனைவியும், வினோத்குமார் என்ற மகனும், சந்தியா என்ற மகளும் இருக்கிறார்கள். நான் துப்புரவு பணியாளராக தற்காலிக வேலைக்கும் போவேன். நான் இந்து தாழ்த்தப்பட்ட சக்கிலியர் ஜாதியை சேர்ந்தவர், சக்கிலியர் ஜாதியை அருந்ததியர் என்றும் சொல்வார்கள். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1,2 மற்றும் 3ஆம் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது, என்னிடம் காண்பிக்கப்படும் புகார்

வாக்குமூலத்தில் இருக்கும் முருகன் என்ற கையொப்பம் என்னுடைய கையொப்பம்தான், இந்த கையொப்பம்தான் Exhibit P1. எனக்கு படிக்க தெரியாது, என்னுடைய Exhibit P1 கையொப்பம் இருக்கும் ஆவணத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பது எனக்கு தெரியாது, அதை யாரும் எனக்கு படித்து காட்டவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி, நீதிமன்றம் அதற்கு அனுமதி அளித்ததன்பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**</u>:

நான் போலிசார் விசாரணையிலும், என் புகார் வாக்குமூலத்திலும் 10.4.2022ஆம் தேதி காலை 7.30 மணிக்கு கப்பத்துறை பகுதியில் துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்தேன் என்றும், அப்போது என் தாய்மாமன் கிட்டான் விவசாயத்திற்கு உரம் வாங்க கடைக்கு சென்றபோது கப்பத்துரையில் உள்ள 1ஆம் எதிரி பாத்திமாவின் சில்லரை விற்பனை கடைக்கு முன்பு எச்சில் துப்பிவிட்டார் என்றும், அதை பார்த்த 1ஆம் எதிரி பாத்திமா என் மாமா கிட்டானை பார்த்து ஏண்டா சக்கிலிய தாயோளி கடைக்கு அருகில் தான் எச்சில் துப்புவாயா என்று கேட்டு தகராறு செய்து என் மாமா கிட்டானை கையால் தாக்கிவிட்டார், நான் அதை பார்த்தேன் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரியில்லை.

2. நான் போலிசார் விசாரணையிலும், என் புகார் வாக்குமூலத்திலும் மேலும் நான் 1ஆம் எதிரி பாத்திமாவிடம்

எதற்காக எனது மாமாவை ஜாதி பெயரை சொல்லி திட்டி அடித்தீர்கள் என்று கேட்டேன் என்றும், அதற்கு 1ஆம் எதிரி பாத்திமாவின் மகனான 3ஆம் எதிரி உமர் மற்றும் 1ஆம் எதிரி பாத்திமாவின் கணவரான 2ஆம் எதிரி சாகுல்அமீதும் வந்து என்னிடம் ஏண்டா சக்கிலிய நாயே நீ என்ன எங்களை கேள்வி கேட்பதற்கு என்று சொல்லி என்னை தாக்க வந்தனர் என்றும், இதனால் நான் பயந்துபோய் அந்த கடைக்கு முன்பு இருந்த பிளாஸ்டிக் பைப்பை தற்காப்பிற்காக எடுத்தேன் என்றும், இதை பார்த்த 3ஆம் எதிரி உமர் அவரது கடையில் வைத்திருந்த இரும்பு பைப்பை எடுத்து வந்து எனது இடது பக்க தலையில் பலமாக தாக்கினார் என்றும், இதனால் எனக்கு இடது பக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது என்றும் சொல்லியுள்ளேன் என்று சொன்னால், சரியில்லை. எனக்கு எப்படி தலையில் காயம் ஏற்பட்டது என்று கேட்டால், நான் வேலை செய்தபோது கீழே விழுந்ததால் தலையில் காயம் ஏற்பட்டது.

3. நான் எதிரிகளுக்கு எதிராக புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது நாங்களும், எதிரிகளும் ஒரே ஊரில் இருப்பதால் நான் தற்போது எதிரிகளோடு சமதானம் ஆகிவிட்டேன் என்றும், அதனால் நான் எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை.

**1, 2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.10.09 16:24:47 +0530